சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள்.28.01.2025

OS.No. 725/2018

DW 1 : பிரபாவதி (வயது 40 ) க/பெ.அமிர்தராஜ்

( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இந்த பிரதிவாதிகளை பொறுத்து தாவா 6 வது அயிட்ட சொத்து சர்வே எண்.85/11 விஸ்தீரணம் 0.21.5 ஹெக்டேர் மட்டுமே சம்மந்தப்பட்டது என்றால் சர்வே எண்.85/11 க்கு சம்மந்தப்பட்டது என்று தெரியும் விஸ்தீரணம் தெரியாது. அ.வ.எண்.724/2018 வழக்கானது பார்வதி, ராஜேந்திரன், நல்லபொன்னு, சந்திரா ஆகிய நால்வர் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் வாதிகள் எனக்கு ஏதேனும் பவர் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. வழக்கில் சர்வே எண்.85/11 ஐ பொறுத்து பாக பாத்திய விடுதலை பத்திரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அ.வ.எண்.724/18 வழக்கின் வாதிகளுக்கு தாவா சர்வே எண்.85/11 ல் பாதி பாகம் உள்ளது என்றும் அதனை மறைத்து தாவா சொத்தை பொறுத்து நாங்கள் பத்திரம் எழுதி கொண்டோம் என்றால் சரியல்ல. தற்போதைய வழக்கில் உள்ள 1 முதல் 4 பிரதிவாதிகள் எழுதி கொடுத்ததாக கூறும் பவர் பத்திரம் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் இந்த வழக்கில் 1 முதல் 4 பிரதிவாதிகள் எழுதி கொடுத்ததாக நான் கூறவில்லை. தாவா சர்வே எண்.85/11 சொத்து முழுவதும் எனக்கோ எனது முன் பாத்தியஸ்தர்களுக்கோ முழுவதுமாக பாத்தியப்பட்டது என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.வ.எண்.724/2018 வழக்கின் வாதிகளாகிய தற்போதைய வழக்கின் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு தாவா சர்வே

எண்.85/11 ல் பாதி பாகம் உள்ளது என்றால் சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்துள்ள தற்போதைய வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>ம.வி</u>**- இல்லை.

/signed/
பிரபாவதி

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

sd/-Tmt.R.Mohana.,B.L.,
சார்பு நீதிபதி
இலால்குடி